## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் - 2017

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்பு பணியகத்தினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 18(3)ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களானவை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் - பணியகம்

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

பணியகத்தின் துணைக் கம்பனியான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) கம்பனியின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியற்ற அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தது.

## 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - பணியகம்

### 2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

நியமத்தின் 83 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடுகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்காக தீர்மானிக்கப்பட்ட கழிவு விகிதத்திற்கு பதிலாக முன்னைய ஆண்டிற்குரிய கழிவு விகிதம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு வட்டிக் கிரயம் கணிப்பீடு செய்யப்பட்டமையின் காரணமாக ஆண்டின் வட்டிக் கிரயம் ரூபா 1,070,732 இனால் அதிகரித்தும் ஆயுட்கால இலாபம் அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20**

அரசாங்க மூலதன மானியத்தின் கீழ் கிடைத்த தொகையிலிருந்து இரத்தினபுரி பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 357,964,043 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 21,850,722 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அது தொடர்பாக நியமத்தின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுமானத்தேய்வுப் பெறுமதிக்குச் சமமான அளவு அரசாங்க மானியங்களுக்குரிய பிற்போட்ட வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37**

முன்னைய ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கணப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவுப்படி கவனத்தில் கொள்ளப்படாமையின் காரணமாக முன்னைய ஆண்டிற்காக குறைவாகச் செலுத்தப்பட்ட பங்களிப்புப் பணமான ரூபா 6,261,168 தொகை தொடர்பாக பணியகம் நிதியத்திற்கு முறைப்பாடொன்றைச் சமர்ப்பித்திருந்த போதிலும், 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பாக இறுதி முடிவிற்கு உடன்பட்டிருக்கவில்லை. நியமத்தின் 16 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய பொறுப்புக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

நியமத்தின் 63 ஆம் பந்தியின் பிரகாரம் காலாவதியாகும் வரை நிறுத்தி வைக்கப்பட்ட நிதிச்சொத்துக்களை காலக்கழிவு செய்யும் போது செயற்பாட்டிலுள்ள வட்டி விகிதத்தின் (Effective Interest Rate) பிரகாரம் கணிப்பிடப்பட்ட வட்டி வருமானம் முதலீட்டு வருமானமாக இனங்காணப்பட வேண்டியிருந்தது. எனினும் பணியகம் வெளியிட்ட வட்டி விகிதத்தின் (Coupon Interest Rate) அடிப்படையில் கணிப்பிடப்பட்ட வட்டி, முதலீட்டு வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது.

### 2.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 8,000,000 பெறுமதியான நிலையான வைப்புக்களுக்காக நேரடியாக வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 986,240 தொகையான வட்டி வருமானம் இனங்காணப்படாமல் நானாவித வருமானத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் பெறவேண்டிய வட்டி வருமானம் மற்றும் முதலீட்டின் கீழும் மீண்டும் ஒருமுறை கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா 986,240 இனாலும், ஆண்டின் நானாவித வருமானம் சமமான அளவினாலும் அதிகரித்துப் பதியப்பட்டிருந்தது.

### 2.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பேரேட்டின் பிரகாரமான முற்பணக் கணக்கின் மீதிக்கும் முற்பணப் பதிவேட்டின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 2,453,137 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### (அ) பெறவேண்டிய கணக்குகள்

(i) 2000 - 2012 காலப்பகுதிக்குரியதாக கிடைக்க வேண்டிய ரூபா 493,250 தொகையான செஸ் தரகுப் பணத்தை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பணியகத்திற்குரிய கட்டிடமொன்றில் 2013 ஆம் ஆண்டு முதல் நடாத்திச் செல்லப்படுகின்ற ஓமான் தூதுவர் அலுவலகத்திற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சிலிருந்து வாடகையாக ரூபா 67,568,640 தொகை அறவிட வேண்டியிருந்தது. எனினும், அந்த வாடகைப் பணம் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படாமல் காணப்பட்டது.

(iii) அமைச்சில் நியமனம் கிடைத்த, பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 2017 ஆம் ஆண்டில் கையடக்கத் தொலைபேசி பட்டியல்களுக்காக பணியகத்தால் செலுத்தப்பட்ட ரூபா 11,055,416 தொகை அமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்ய வேண்டியிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், வரிசை அமைச்சின் செயலாளரின் 2018 சனவரி 16 ஆந் திகதிய கடிதம் மூலம் அந்தக் கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்

(i) கொரியா ஆட்சேர்ப்புக் கட்டணமாக 2015 ஆம் ஆண்டின் போது குடியகல்வோரிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 19,301,089 தொகை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் பதிவு செய்தல் கட்டணத்திலிருந்து 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரியதாக மீண்டும் செலுத்த வேண்டிய ரூபா 207,272,792 கூட்டுத்தொகை மீளாய்வாண்டு இறுதிவரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தங்காலை பயிற்சி நிலையம் அமைந்துள் காணிக்காக தங்காலை பிரதேச செயலாளருக்கு 2015 முதல் 2017 வரையான காலப்பகுதிக்குரிய வாடகையாக செலுத்த வேண்டிய ரூபா 34,720,000 தொகை மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய உணவு வழங்குனர்களுக்குச் செலுத்தவேண்டிய ரூபா 1,419,703 தொகை என்பன தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட எல்லையை விஞ்சி 2012, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 04 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 6,141,754 கூட்டுப்பெறுமதியான செயல்நிமித்த உப கட்டுநிதி கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்கின்ற நபர்களிடமிருந்து பணியகத்தில் ஆரம்பமாக பதிவு செய்யும் போது ரூபா 15,200 தொகையும், மீண்டும் பதிவு செய்யும்போது ரூபா 3,200 தொகையும் மாத்திரம் கட்டணமாக அறவிட வேண்டியிருந்தது. எனினும், முறையான அங்கீகாரமின்றயும், கட்டண அறவிடல் முறையான திட்டமின்றியும் வெளிநாடு செல்கின்ற ஊழியர்களிடமிருந்து பல்வேறு முறைகளில் கட்டணம் அறவிடப்பட்டு மீளாய்வாண்டில் கூட்டுமொத்தமாக ரூபா 405,694,585 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1985 இன் 21ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரச்சட்டத்தின் 45(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு வெளியே தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களின் நலன்களுக்காக தொழிலாளர் நலன்புரி நிதியமொன்று தாபிக்கப்பட்டு அதிகாரச்சட்டத்தின் 45(2) ஆம் பிரிவின் பிரகாரம் அதற்காக சேருகின்ற பணம் அந்நிதியத்தால் சேகரிக்கப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே பணியக அதிகாரச்சட்டத்தின் 48(இ) பிரிவின் பிரகாரம் இலங்கையிலிருந்து வெளியே சேவையாற்றுவதற்காக சேர்க்கப்படுகின்ற இலங்கையர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் பயிற்றுவித்தல் தொடர்பாக ஏற்படுகின்ற சகல செலவுகளும் அந்த நிதியத்திலிருந்து செலவிட வேண்டியிருந்தது. எனினும் அந்த நிதியத்திலிருந்து செலவினங்களைச் செய்யாமல் பணியகத்தால் வெளிநாடு செல்கின்ற ஊழியர்களிடமிருந்து தனிப்பட்ட முறையில் பயிற்சிக் கட்டணமாக ரூபா 143,272,642 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம்பிரிவின் பிரகாரம் திறைசேரி செயலாளரின் அங்கீகாரமின்றி பணியகத்தால் தயாரிக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் 09 முறைமைகளின் கீழ் மீளாய்வாண்டின்போதும் கூட்டுமொத்தமாக ரூபா 83,174,556 தொகை பதவியணியினர் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிவிளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான தொகுதியினதும், பணியகத்தினதும் நிதி விளைவுகள் முறையே ரூபா 882,473,057 மற்றும் ரூபா 882,369,779 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் முறையே ரூபா 1,153,737,001 மற்றும் ரூபா 1,151,728,485 இலாபமாக இருந்தது. அதன் பிரகாரம் தொகுதியினதும், பணியகத்தினதும் நிதிவிளைவுகள் முறையே ரூபா 271,263,944 இனாலும் ரூபா 269,358,706 இனாலும் வீழ்ச்சியடைந்திருந்தது. மீளாய்வாண்டில் கொரிய வேலைவாய்ப்பிற்காக வெளியே சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டண வருமானம் 50 சதவீத அளவில் குறைவடைந்தமை இதற்கான பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதிவிளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 243,148,771 தொகையான பணியகத்தின் வரிக்குப் பின் தேறிய இலாபம் 2014 ஆம் ஆண்டின் போது அதிகரித்திருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது குறைவடைந்திருந்தது. எனினும், 2016 ஆம் ஆண்டு முதல் மீண்டும் அதிகரித்திருந்தது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய

வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,427,222,753 தொகையான பணியத்தின் பங்களிப்பு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 2,977,630,270 ஆகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

2016 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வெளியே சென்ற ஊழியர்களின் எண்ணிக்கை 242,930 ஆகக் காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 212,162 வரை, அதாவது 12.66 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. பணியகத்தின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் 2016 மற்றும் 2017 என்ற ஆண்டுகள் இரண்டிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வெளியே சென்ற பெண் மற்றும் ஆண் ஊழியர்களின் உள்ளடக்கம் முறையே 34 சதவீதம் முதல் 66 சதவீதம் ஆக இருந்தன.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியத்தால் 2015 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனமொன்றுடன் வாடகை அடிப்படையில் 09 வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக செய்துகொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கை 2015 ஒக்தோபர் 10 ஆந் திகதியன்று முடிவடைந்திருந்தது. எனினும், நிறுவனத்திற்குச் சொந்தமாகவுள்ள உடைந்த வாகனங்களை விற்பனை செய்து புதிதாக வாகனங்களை கொள்வனவு செய்து உத்தியோகத்தர்களின் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் காண்பித்து வாடகை உடன்படிக்கை காலம் 06 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டு மீண்டும் கேள்வி கோராமல் மேற்கூறப்பட்ட நிறுவனத்திலிருந்தே தொடர்ச்சியாக வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் அவ்வாறு பெற்ற வாகனங்களின் வாடகை 10 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் வாடகை வாகனங்களின் எண்ணிக்கை 22 வரை அதிகரிக்கப்பட்டு அதற்காக ரூபா 26,879,520 தொகை செலவிடப்பட்டிருந்தது.

பணியகத்தால் உடைந்த நிலையில் காணப்பட்டதாக சிபாரிசு செய்யப்பட்ட 12 வாகனங்கள் 2018 ஆம் ஆண்டில் ஏலவிற்பனைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 07 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. எனினும், வாடகை வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 18 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறைகளில் சட்டங்கள் மதிக்கப்படுகின்றமை மற்றும் ஒழுக்க விழுமியங்களை உறுதிப்படுத்தும் நோக்கில் பணியகத்தால் விசேட புலனாய்வு பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதற்காக 37 பேர்களையுடைய பதவியணியினர் நியமிக்கப்பட்டிருந்தனர். 2017 ஆம் ஆண்டில் பல்வேறு காரணங்களுக்குரிய 4,311 முறைப்பாடுகள் பணியகத்திற்குக் கிடைத்திருந்த போதிலும், அதில் 2,815 முறைப்பாடுகள் அதாவது 65 சதவீதம் விசேட புலனாய்வு நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டிருந்தது.

பணியகத்தின் செயல்நடைமுறைக் கைநூலின் பிரகாரம் புலனாய்வுப் பிரிவிற்கு அவ்வாறு கிடைக்கின்ற முறைப்பாடுகளைப் பதிவுசெய்து 14 நாட்களுக்குள் தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், அவ்வாறு முடியாத முறைப்பாடுகளுக்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்டப் பிரிவிற்கு

அனுப்பப்பட வேண்டியிருந்தது. எனினும், 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் தீர்வினை வழங்குவதற்கோ அல்லது சட்டப்பிரிவிற்கு அனுப்புவதற்கோ முடியாதிருந்த 345 முறைப்பாடுகள் புலனாய்வுப் பிரிவில் காணப்பட்டன.

(இ) 2017 ஆம் ஆண்டிலும், அதற்கு முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 805 பொதுமக்கள் முறைப்பாடுகளுக்கிடையே 180 முறைப்பாடுகளின் நிறுவனங்களை கறுப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்ட போதிலும் விசாரணை நடத்தப்படாமல் ஒரு மாத காலத்தை விஞ்சியிருந்ததுடன் 04 முறைப்பாடுகள் ஒரு வருட காலத்தை விஞ்சியிருந்தது. 2017 ஆம் ஆண்டில் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்ட வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கிடையில் 02 நிறுவனங்கள் 06 சந்தர்ப்பங்களிலும், ஒரு நிறுவனம் 07 சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க கொள்கையின் பிரகாரம் பிள்ளைகளின் சுக நலன்களைக் கருதி தாய்மார்கள் வெளிநாடு செல்வதை மட்டுப்படுத்தும் நோக்கில் குடும்ப பின்புல அறிக்கை பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட போலியாகத் தயாரிக்கப்பட்ட 6,420 குடும்ப பின்புல அறிக்கைகள் விநியோகித்தல், களப் பரிசோதனை மேற்கொள்ளாமல் 60 குடும்ப பின்புல அறிக்கை விநியோகித்தல், போலி ஆவணங்கள் தயாரித்தல், முறையற்ற உழைப்புக்களை மேற்கொள்ளல், ஒரே பெண்ணுக்கு பிரதேச செயலகங்கள் இரண்டினால் குடும்ப பின்புல அறிக்கை விநியோகித்தல் போன்ற மோசடிகள் இடம்பெற்றிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் குடும்ப பின்புல அறிக்கை அங்கீகரிப்பதற்கு பிரதேச செயலாளர் தலைமைத்துவ குழுவொன்றை நியமித்து, அதற்குரிய முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கு அதிவிசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த முறைமைக்கு முரணாக 2017 ஆம் ஆண்டில் 10 மாதங்களில் பணியகத்தின் உயர் முகாமையினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 02 உத்தியோகத்தர்களினால் 100 குடும்ப பின்புல அறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது.

(உ) கடந்த தொடரான 03 வருடங்களில் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு சென்று பல்வேறு காரணங்களின் அடிப்படையில் வெளிநாட்டு தூதரகங்களில் தஞ்சமடைந்த இலங்கைப் பெண்களில் 10,324 பேர் தடுத்து வைக்கும் விடுதிகளுக்கு அனுப்பப்பட்டிருந்தனர். 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையில் அதில் தஞ்சமடைந்த 250 பேர்களில் 20 பேர்கள் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் அந்த வீடுகளில் தங்கியிருந்தனர். அவ்வாறே அந்த வீடுகளின் வாடகை, உணவு மற்றும் வைத்திய உதவிகளுக்காக 2017 ஆம் ஆண்டில் கூட்டுமொத்தமாக ரூபா 43,300,824 தொகை பணியகத்தால் செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) பணியகத்தால் 1988 ஆம் ஆண்டு முதல் ஊழியர்களுக்காக குடியகல்வு ஊழியர் பங்களிப்பு நிதியம் முறைமையொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதியத்தால் குடியகல்வு ஊழியர்கள் 1,602 பேர்களுக்குரியதாக ரூபா 7,708,918 தொகையான மீதி காணப்பட்டது. இந்த நிதியம் ஆரம்பிக்கும் நோக்கம் தெளிவாகும் வகையில் எந்தவொரு எழுத்துமூல தகவலும் பணியகத்திடம் காணப்படாதிருந்ததுடன் நிதியத்தின் முகாமைத்துவ நிலை தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று இன்றி நிதியம் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் அங்கத்தவர் பங்களிப்பு ரூபா 7,708,918 தொகை பொறுப்பாகக் காண்பிக்கப்பட்ட போதிலும், அதற்குரிய முதலீடு மற்றும் கிடைக்க வேண்டிய பெறுமதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 6,051,145 மாத்திரமாகக் காணப்பட்டது. அவ்வாறே அதற்குரிய கணக்கு அறிக்கைகள் உரிய பிரகாரம் பேணப்படாமையின் காரணமாக முதலீட்டு வருமானம் சரியாக நிதியத்தில் செலவு வைக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 429,837,611 தொகையான ஊழியர் கடன் மீதியில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் அமுல்படுத்தப்பட்ட பின்வரும் கடன் திட்டம் காணப்பட்டது.

(i) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்க முடியுமான ஆகக்கூடிய இடர்கடன் தொகை ரூபா 250,000 இற்கு வரையறுக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக உத்தியோகத்தரின் மொத்த சம்பளத்தில் 12 மடங்காக இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் கடன் மீதி பட்டியலின் பிரகாரம் ரூபா 250,000 தொகையை விஞ்சி ரூபா 279,543,713 கூட்டுத்தொகையான 632 கடன் மீதிகளும், ரூபா 500,000 தொகையை விஞ்சிய 149 கடன் மீதிகளும் மற்றும் ரூபா 1,000,000 தொகையை விஞ்சிய ஒரு கடன் மீதியும் காணப்பட்டன.

(ii) பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி ஒரு உத்தியோகத்தரின் மாதாந்த சம்பளத்திற்கு வரையறுக்கும் வகையில் அவசர கடன் வழங்கும் முறைமையொன்று பணியத்தால் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குரிய கூட்டுமொத்தமான ரூபா 1,305,975 கடன் மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்டது.

(ஏ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பணியகத்தின் பதவியணியினருக்காக மருத்துவ பட்டியல்களை மீளளிப்புச் செய்தல் மற்றும் திடீர் விபத்து இழப்பீடுகளை வழங்கும் காப்புறுதித் திட்டமொன்று 1995 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், வருடாந்தம் அதற்குரிய மொத்த இழப்பீட்டுப் பணமும் பணியகத்தின் வருமானத்தைப் பயன்படுத்தி செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 45,088,783 தொகையொன்று அதற்காகச் செலவிடப்பட்டிருந்தது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியாக அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 17 ஆவது பிரிவின் 3 ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியக நிதியம் மூலம் இவ்வாறான செலவினங்களைச் செய்யும் இயலுமை காணப்படவில்லை.

(ஐ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அபுதாபி அலுவலகத்தில் 2014 யூன் மாதத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 1,058,276 தொகையான நிதி மோசடிகள் தொடர்பான முறையான பரிசோதனையொன்றை நடாத்துவதற்கு 2014 யூன் 17 ஆந் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடொன்றைச் செய்து மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அதன் முன்னேற்றம் அறிக்கையிடப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக பணியகத்தால் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் நோக்கங்களை நிறைவேற்றும் தந்திரோபாயமாக வேலை வாய்ப்பிற்காக வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்த்த

நபர்களின் தகவல்களை உள்ளடக்கி தொழில் வங்கியொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 17,663 பேர் அதில் பதிவு செய்திருந்ததுடன் வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களால் 120,462 சந்தர்ப்பங்களில் அதில் பதிவு செய்துள்ளவர்களின் தகவல்கள் பரீட்சிக்கப்பட்டிருந்தது. எனினும், பதிவு செய்தவர்களில் 1,368 பேர்களுக்கு மாத்திரமே வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் தொழில் வங்கியில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 8,405 பேர்களால் (182 சதவீதத்தால்) உயர்வடைந்திருந்தது. எனினும், 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கைகளில் 09 சதவீதம் அளவில் வெளிநாடு சென்றிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டு வரையில் அது 07 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. தோல்வியடைந்த அத்திட்ட முறைமைக்கு மாற்றுவழியாக வெளிநாட்டு ஊழியத் தேவைக்கு ஈடுகொடுக்கும் பயிற்சி பெற்ற விண்ணப்பதாரர்களுக்குரிய தொழில்சார் பயிற்சி நிறுவனங்களிலிருந்து தெரிவு செய்து பதிவு செய்தல் போன்ற வேலைத்திட்டம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினதும் பணியகத்தினதும் ஒத்துழைப்பில் குடியகலும் ஊழியர்களுக்காக அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் உத்தேசத் திட்டத்தின் கீழ் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 10,264 குடியகல்வோருக்காக சமுர்த்தி வங்கி மூலம் ரூபா 2,998 மில்லியன் கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 360.27 மில்லியன் தொகை கடன் வழங்கும் நிபந்தனைகளுக்கு முரணாகவும், எந்தவித பிணையொன்றும் வைக்கப்படாமல் 1,573 குடியகல்வோர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2,674 குடியகல்வோர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 610.14 மில்லியன் கடன் தொகை மீளச் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்ததுடன் இதுவரையில் அந்த உத்தேசத் திட்டம் செயற்பாடற்றுக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் பணியகத்திடம் காணப்படாதிருந்ததுடன் மேற்கூறப்பட்ட பணிகளுக்கு பணியகத்தால் சமுர்த்தி அதிகாரசபையின் பெயரில் இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 100 மில்லியன் வைப்புத் தொகைக்குரிய வட்டியும் 2014 ஆம் ஆண்டு முதல் பணியகத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

(இ) குடும்ப பின்புல அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக பணியகத்தால் தாபிக்கப்பட்டிருந்த கணனி முறைமையை வடிவமைப்புச் செய்த பணியகத்தின் உத்தியோகத்தர் ஒருவருக்கு முறையாக உள்ளகக் கட்டுப்பாடின்றி அந்த அறிக்கை வழங்குவதற்கும், தொடர்புடைய நடவடிக்கைகளும் கையளிக்கப்பட்டிருந்தது. அவரால் 09 குடும்ப பின்புல அறிக்கைகளுக்காக கணனி முறைமை ஊடாக போலியாக சிபாரிசு வழங்கப்பட்டிருந்தது. அதற்குரிய நிபுணத்துவ நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் அந்த முறைமை வடிவமைக்கும் போதும், அமுல்படுத்தும் போதும் காணப்பட்ட 05 அடிப்படை வழுக்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த நிலையில் போலியாக குடும்ப பின்புல அறிக்கை விநியோகிக்கப்படக்கூடிய சூழலொன்று வடிவமைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

அதற்குரிய தீர்வாக தற்போது அமுல்படுத்தப்படுகின்ற கணனி முறைமையை முறையான பிரகாரமும், மோசடி மற்றும் தவறுகளை குறைக்கும் வகையிலும் பேணிச் செல்வதற்கு எடுக்கப்பட வேண்டிய செயல்வழிகள் தொடர்பாக மேற்கூறப்பட்ட நிபுணத்துவ நிறுவனத்தால் பரிந்துரை செய்யப்பட்டு கணக்காய்வுத் திகதியான 2018 ஏப்ரல் 10 ஆந்திகதி வரையில் 06 மாத காலத்தை விஞ்சியிருந்த போதிலும், அந்த பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆவணங்களின் படி, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தொழிலாளர் நலன்புரிப் பிரிவிற்கு தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தரால் அதன் கடமை நடவடிக்கைகளுக்குரியதாக கிடைத்த வருமானம் அ.டொலர் 680 தொகை மற்றும் சில்லறைக் காசு கட்டுநிதியாக வழங்கப்பட்ட அ.டொலர் 400 தொகையும் தீர்த்து வைக்காமல் 2017 யூலை 27 ஆந் திகதி முதல் சேவையிலிருந்து விலகியிருந்தார். எனினும், முறையான மேற்பார்வையின்றியும், கட்டுப்பாடின்றியும் வருமானம் சேகரித்தல், கணக்கு வைத்தல் மற்றும் அறிக்கை வைத்தல், சில்லறைக் காசு கட்டுநிதி பேணிச் செல்லல் போன்ற கடமை நடவடிக்கைகள் எந்தவித பிணைப் பாதுகாப்பும் வைக்கப்படாமல் தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், ஏற்பட்ட நிதி ரீதியான நட்டத்தை அந்த நபரிடமிருந்து அறவிடுவதற்கு பணியகம் எந்தவித முயற்சியும் எடுத்திருக்கவில்லை.

### 4.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பணியகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டங்களின் உத்தியோகத்தர்களுக்காக சீருடைப் படியாக ஒருவருக்காக வருடாந்தம் ரூபா 27,500 இற்கும் ரூபா 28,000 இற்கும் இடையிலான தொகை வீதம் மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 10,423,267 தொகை பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த உத்தியோகத்தருக்கு குறித்துரைத்த சீருடையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பணியகத்தில் ஊழியர் சேமலாப நிதியக் கணிப்பீட்டின் போது வாழ்க்கைச் செலவுப்படி கவனத்தில் கொள்ளாமல் சேமலாப நிதி கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக, 10 வருடங்களாக அந்த நிதியத்திற்கு பணியகத்தின் பங்களிப்பிற்கு மேலதிகமாக ஊழியர் பங்களிப்பாக கூட்டுமொத்தமாக ரூபா 42,859,186 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டமையால் நிதி ரீதியான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த பணியகத்தின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்க முடியாதிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பணியத்தால் 2017 ஆம் ஆண்டில் சில சந்தர்ப்பங்களின் போது 17 உத்தியோகத்தர்களுக்கு ஏனைய நிறுவனங்களில் சேவையாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 15 பேர்களுக்காக சம்பளமாகச் செலுத்தப்பட்ட ரூபா 5,762,530 தொகையும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.7 பதவியணியின் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,251 இல் நிறைவேற்றுத் தரத்திலும், நிறைவேற்று தரமல்லாத தரங்களிலும் முறையே 83 மற்றும் 31 உத்தியோகத்தர்கள் வெற்றிடமாகக் காணப்பட்டனர். எனினும், அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி பதவி நிலையற்ற சேவைத் தொகுதியில் 21 உத்தியோகத்தர்களும், ஆரம்ப சேவைத் தொகுதியில் 28 ஊழியர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) வெளிநாட்டு தூதரகங்களில் நலன்புரிப் பிரிவிற்காக உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு உரிய பணியகத்தால் பயன்படுத்தப்படுகின்ற ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன்

தற்போது பயன்படுத்தப்படுகின்ற நடைமுறையில் கடமை விபரங்கள், நியமன அதிகாரி, சம்பளக் குறியீடு, சம்பளப் படி நிலை, சேவைக்கு உள்ளீர்க்கும் முறைமை, சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை வெளிநாட்டு தூதரகங்களில் அரச பிரதிநிதி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக நபர்களைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளக்கூடிய விடயங்கள் மற்றும் தகைமைகளுக்காக அமைச்சரவைக் குறிப்பு இல. 04/1607/027/027 இன் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் காண்பிக்கப்பட்ட தகைமைகள் மற்றும் அவ்வாறு அங்கீகாரிக்கப்பட்ட தகைமைகளுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 05 தூதுவராலயங்களில் தலைவர்களாக நியமிக்கப்பட்ட மதியுரையாளர்களின் நியமனம்தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) ஆட்சேர்ப்பின் ஆகக்கூடிய வயதெல்லை 50 வருடங்களாக இருந்த போதிலும் 53 வயதை விஞ்சிய உத்தியோகத்தர் ஒருவர் சிங்கப்பூர் தூதுவராலயத்தில் மதியுரையாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

(ii) மதியுரையாளர் பதவிக்கான தகைமையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரியாக அல்லது 10 வருட சிரேஷ்ட பதவிநிலை பதவியொன்றில் சேவையுடன் 15 வருட சேவை அனுபவமும் இருக்க வேண்டிய போதிலும் கட்டார் தூதுவராலயத்தில் மதியுரையாளராக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் அந்தத் தகைமைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(iii) சிங்கப்பூர் மற்றும் லெபனான் தூதுவராலயங்களுக்கு சேர்க்கப்பட்ட மதியுரையாளர்களுக்குரிய கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தனவா என உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் ஆளணிக் கோவையில் காணப்படவில்லை.

(ஈ) சிரேஷ்ட முகாமையாளர் பதவிக்கு உள்ளக ரீதியில் ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பணியகத்தின் ஒன்பது மாகாண அலுவலகங்களுக்கான ஆட்சேர்க்கப்பட்ட 09 சிரேஷ்ட முகாமையாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் காண்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த தகைமைகளை பூர்த்தி செய்யாதிருந்த 03 உத்தியோகத்தர்களும், மோசமான நடத்தைகளின் காரணமாக இரண்டு சந்தர்ப்பங்களின் போது ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் தண்டனை பெற்ற ஒரு உத்தியோகத்தரும் உள்ளடங்கி இருந்தனர்.

(ii) 2012 ஏப்ரல் 03 ஆந் திகதி M(IV) தரத்தில் முகாமையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள ஒரு பெண் உத்தியோகத்தர் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் உள்ளீர்ப்பு செய்யும் போது ரூபா 31,310 சம்பள படி நிலையில் பின்னராக இருந்தது. எனினும், முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 30 இன் பிரகாரம் இந்த சம்பளம் MM 1-1 (ii தரம்) முகாமையாளர் பதவியின் சம்பளப் படிநிலை 09 ஆகும். அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது அந்தப் பெண் உத்தியோகத்தர் MM 1-1 (I தரம்) முகாமையாளர் பதவிக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டிருந்தார்.

(iii) இந்த உத்தியோகத்தர்களுக்குரிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை சித்தி அடைந்ததெனவும் சில உத்தியோகத்தர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் தொடர்பாக சான்றிதழ்கள் உரிய நிறுவனம் மூலம் உறுதிப்படுத்தப்படாமைக்கான தகவல்கள் ஆளணிக் கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2016 யூன் 30 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் 10 இணைப்பு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஊ) மேலும் 12 முகாமையாளர்கள் பதவிகள் மற்றும் 19 உதவி முகாமையாளர்கள் பதவிகளுக்காக தகைமை பெற்ற உத்தியோகத்தர்களை நிரந்தரமாக ஆட்சேர்ப்புச் செய்யாமல் பதில் கடமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்பட்டு 05 வருட காலத்தை விஞ்சிய 12 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டு காணப்படுகின்ற பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது என்பது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

#### 6.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தால் அதன் கிளை அலுவலகத்திற்காக 2014 ஆம் ஆண்டில் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடத்திற்காக மீளாய்வாண்டு முடியும் வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 21,926,000 வாடகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. அதற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு இருந்தது.

(i) கட்டிடத்தை வாடகைக்கு வழங்குவதற்கு தீர்மானம் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட 2014 ஒக்தோபர் மாதம் மாகாண மதிப்பீட்டாளரின் அறிக்கையின் பிரகாரம் மாதாந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 500,000 தொகை மற்றும் வருடாந்த வாடகை ரூபா 5,660,000 ஆக இருந்த போதிலும், பணியகத்தால் வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாதாந்த வாடகை ரூபா 550,000 வரை அதிகரிக்கப்பட்டு 2015 பெப்ரவரி 13 ஆந் திகதி வருடாந்த வாடகையாக ரூபா 6,226,000 தொகை செலுத்தி அக்கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்டிருந்தது.

(ii) இந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் வாடகைக் கால ஆரம்பத் திகதி 2014 திசெம்பர் 01 ஆக இருந்த போதிலும் கட்டிடத்தை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் 2014 திசெம்பர் 22 ஆந் திகதி அமைச்சு அங்கீகாரம் வழங்கியிருந்தது. எனினும், இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2014 நவம்பர் 20 ஆந் திகதியே வழங்கப்பட்டிருந்தது.

(iii) இந்த பெறுகைகளுக்குரிய செய்திப் பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம், 10 வாகனங்களை நிறுத்தும் வசதிகள் காணப்பட வேண்டியிருந்த போதிலும், அந்தக் கட்டிடத்தில் மூன்று வாகனங்கள் மாத்திரமே நிறுத்தக்கூடிய வசதிகள் காணப்படுகின்றமை 2017 செப்தெம்பர் 07 ஆந் திகதி மேற்கொண்ட களக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(iv) வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிட உரிமையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகளை உள்ளடக்கி வளிச் சமநிலையாக்கி இயந்திரத் தொகுதிக்காக ரூபா 455,000 தொகையும், புதிய மின்மாற்றி (டிரான்ஸ்போமர்) ஒன்றைப் பொருத்துவதற்காக ரூபா 2,105,758 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 2,560,758 பணியகத்தால் செலவிடப்பட்டிருந்தது. எந்தவித அடிப்படையுமின்றி அந்த செலவினங்களை மேற்கொண்டு 05 மாதங்களும் 1 ½ வருடங்களுக்கும் பின்பு தவணைப் பணமாக செலுத்துவதற்கு கட்டிட உரிமையாளருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கணக்காய்வுத் திகதியான 2017 நவம்பர் மாதம் வரையிலும் மின்மாற்றிக்கான (டிரான்ஸ்போமர்) செலவினத்தில் ரூபா 852,892 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும் பணியகத்தால் கட்டிட அபிவிருத்தி செய்தலில் அதன் மதிப்பீட்டுப் பெறுமதி அதிகரித்தமையால் அதுவரை அறவிடப்பட்ட மாதாந்த வாடகை மேலும் ரூபா 200,000 இனால் அதிகரிக்கப்பட்டு மாதமொன்றிற்கு ரூபா 750,000 வீதம் செலுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருந்தது.

(ஆ) பணியகத்தின் உத்தியோகத்தர்களுக்கு வருடாந்த சீருடைகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கனிஷ்ட நிறைவேற்றுத் தரத்தில் 75 பெண் உத்தியோகத்தர்களுக்காக ஒன்று ரூபா 4,250 வீதம் 450 சேலைகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,912,500 தொகையும், தையல்கூலியாக மேலும் ரூபா 432,000 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. எனினும், அந்த சீருடை பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற மிகவும் குறைந்த தரத்துடன் காணப்பட்டதாக உரிய 42 உத்தியோகத்தர்களின் கையொப்பத்துடனான கடிதமொன்று பணியகத்தின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

அதற்குரியதாக 2017 நவம்பர் 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 29 உத்தியோகத்தர்கள் சீருடைகளை அணியாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. எனினும் பணியகத்தால் இது தொடர்பாக முறையான பரிசோதனையொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.2.2 தாமதமான செயற்திட்டம்

2015 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை தீர்மானத்தில் 08 குடியகல்வோர் வள நிலையங்களை நிர்மாணிப்பதற்கும், 2018 ஆம் ஆண்டு பூர்த்தியாகும் போது அதில் 06 வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதியான 2018 யூன் வரையிலும் அதில் 02 வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கூட்டுமொத்தமாக ரூபா 1,109,361 செலவில் மேலும் 04 நிலையங்களை நிர்மாணிப்பதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும், காணி கைப்பற்றல் பணிகள் இடம்பெறாமையின் காரணமாக தொடர்ந்தும் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாத அந்த வேலைக்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினத்திற்கு உள்ளாகியிருந்தது. அவ்வாறே இந்த நடவடிக்கைகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றதன் பின்னர் ஆரம்பிக்கப்பட வேண்டுமென பணிப்பாளர் சபை தீர்மானத்தில் மேலும் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | (i) தகைமைகளைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களை நிரந்தமாக ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்காமை மற்றும் உத்தியோகத்தர்களின் ஆளணிக் கோவையை முறையான பிரகாரம் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) பதவியணியினர் படிகள் மற்றும் கடன் தொடர்பான நடைமுறைகளைத் தயாரித்து முறையான அங்கீகாரத்துடன் அமுல்படுத்தப்படாமை. |
| (ஆ) உள்ளகக் கட்டுப்பாடு | தவறு மற்றும் மோசடி ஏற்படாதிருப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கு முடியுமான வகையிலும் உள்ளகக் கட்டுப்பாட்டு திட்டத்தை தாபித்து பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | பணியகத்திற்குச் சொந்தமான நீண்ட கால கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதிகள் தீர்த்து வைக்கப்படாமை மற்றும் குறித்த காலத்தில் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதிகளைத் தீர்க்கும் முறையில் கட்டுப்பாட்டுத் திட்டம் ஸ்தாபிக்கப்படாமை. |